பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

26 01 2026 MONDAY 7 15 AM

ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. 77வது குடியரசு தினத்தை முன்னிட்டு, தலைநகர் தில்லியில் நாட்டின் ராணுவ வலிமையை பறைசாற்றும் பிரமாண்டமான அணிவகுப்பு இன்று நடைபெறவுள்ளது.

2. மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களிலும், மத்திய-மாநில அரசு அலுவலகங்களிலும் குடியரசு தினம் இன்று உற்சாகமாக கொண்டாடப்படவுள்ளது.

3. "இந்தியா – ஐரோப்பா யூனியன் இடையேயான உத்தி சார் ஒத்துழைப்பு, உலகின் வளர்ச்சிக்கு ஒரு முன்மாதிரியாக அமையும்" என்று ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் திருமதி. Ursula Von Der Leyen கூறியுள்ளார்.

4. மேற்குவங்க மாநிலத்தில் சட்டத்திற்கு புறம்பாக நடந்து கொண்டதாக உதவி தேர்தல் பதிவு அதிகாரியை உடனடியாக பணியிடை நீக்கம் செய்ய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

5. தெற்காசிய மகளிர் Futsal கால்பந்து சாம்பியன் போட்டியில், இந்தியா 5-2 என்ற கோல்கணக்கில் இலங்கையை வென்றது.

>>>>>>>><<<<<<<<

நாட்டின் 77-வது குடியரசு தினம் இன்று நாடு முழுவதும் உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

தலைநகர் புதுதில்லி கடமைப் பாதையில் குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தேசிய கொடியை ஏற்றிவைக்கிறார்.

இதனைத்தொடர்ந்து நடைபெறும் பிரம்மாண்ட அணிவகுப்பை அவர் பார்வையிடுகிறார்.

முப்படைகள், துணை ராணுவப் படைகள், என்.சி.சி மற்றும் என்.எஸ்.எஸ் பிரிவினரின் அணிவகுப்பு மரியாதையை குடியரசுத் தலைவர் ஏற்றுக்கொள்கிறார்.

நாட்டின் கலாச்சார பன்முகத்தன்மையையும் ராணுவ வலிமையையும் உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில் இன்றைய குடியரசு தின அணிவகுப்பு அமையவுள்ளது.

இந்த ஆண்டிற்கான குடியரசுத் தின விழாவில் ஐரோப்பிய கவுன்சில் தலைவர் திரு அன்டோனியோ கோஸ்டா மற்றும் ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் திருமதி உர்சுலா வான் டெர் லேயன் ஆகியோர் தலைமை விருந்தினர்களாக பங்கேற்கின்றனர்.

'சுதந்திரத்தின் மந்திரம்: வந்தே மாதரம்' மற்றும் 'செழிப்பின் மந்திரம்: சுயசார்பு இந்தியா' ஆகியவை இந்த ஆண்டு குடியரசு தின கொண்டாடட்டத்தின் மைய கருத்தாகும்.

பல்வேறு மாநிலங்கள் மற்றும் மத்திய அமைச்சகங்கள் சார்பில் 30 அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் இடம்பெறுகின்றன.

இவை 'வந்தே மாதரம்' பாடலின் 150-வது ஆண்டையும், நாட்டின் சுயசார்பு முன்னேற்றத்தையும் பறைசாற்றவுள்ளன.

முப்படைகளின் கூட்டு வலிமையை விளக்கும் 'ஆபரேஷன் சிந்தூர்' அலங்கார ஊர்தி இந்த ஆண்டு குடியரசு தின அணிவகுப்பில் முதன்முறையாக இடம்பெறுகிறது.

இந்திய ராணுவத்தின் 18 அணிவகுப்பு பிரிவுகளும், 13 இசைக்குழுக்களும் பங்கேற்கின்றன. முதன்முறையாக Battle Array எனும் போர் அணிவகுப்பு முறை காட்சிப்படுத்தப்படுகிறது.

இரண்டாயிரத்து 500 கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும், ரஃபேல், சுகோய்-30 உள்ளிட்ட 29 போர் விமானங்களின் வான்வழி சாகசங்களும் விழாவின் சிகரங்களாக அமையவுள்ளன.

மேலும், சமூகத்தின் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த சுய உதவிக்குழுக்கள் மற்றும் புத்தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரம் சிறப்பு விருந்தினர்கள் இந்த நிகழ்வைக் காண அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த அணிவகுப்பிற்கு முன்னதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி தேசிய போர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்துகிறார்.

மாநில மற்றும் யூனியன் பிரதேச தலைநகரங்களிலும், மத்திய மாநில அரசு அலுவலகங்களிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும், குடியரசு தின விழா உற்சாகத்துடன் இன்று கொண்டாடப்படவுள்ளது.

குடியரசு தினத்தை முன்னிட்டு, ரயில் மற்றும் விமான நிலையங்கள், மத்திய மாநில அரசுகளின் அலுவலகங்கள் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

இந்நாளையொட்டி, நாடுமுழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

>>>>>>>><<<<<<<<

தமிழகத்தின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த வல்லுநர்களுக்கு மத்திய அரசின் பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த விருது, மரபுவழி சித்த மருத்துவத்தை முன்னெடுத்துச் செல்ல தமக்கு மேலும் ஊக்கமளிக்கும் என்று பத்மஸ்ரீ விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள, தஞ்சாவூரைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பேராசிரியர் திரு. புண்ணியமூர்த்தி நடேசன் தெரிவித்துள்ளார்.

(சவுண்ட் பைட் - புண்ணியமூர்த்தி 37 செகண்ட்ஸ்)

தமக்கு அறிவிக்கப்பட்டுள்ள பத்மஸ்ரீ விருதால், மேலும் பல ஆராய்ச்சிகளை உற்சாகத்துடன் செய்ய முடியும் என்று செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த உயிரியல் ஆராய்ச்சியாளர் திரு. குமாரசுவாமி தங்கராஜ் கூறியுள்ளார்.

(சவுண்ட் பைட் - குமாரசுவாமி 49 செகண்ட்ஸ்)

>>>>>>>><<<<<<<<

குடியரசு தின விழாவில் பங்கேற்க, நாடு முழுவதிலும் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பிரதமரின் பயிற்றுநர்கள் திட்ட மாணவர்களுக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

இதற்காக புதுதில்லியில் மூன்று நாள் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இன்று நடைபெறும் குடியரசு தின அணிவகுப்பில் இவர்கள் அனைவரும் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்பார்கள் என்று மத்திய பெரு நிறுவன விவகாரங்கள் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, பயிற்றுநர்கள் மத்திய அமைச்சர் திரு ஹர்ஷ் மல்ஹோத்ராவை நேற்று சந்தித்து உரையாடினர்.

அப்போது கற்றல் அனுபவங்கள் மற்றும் திட்டம் குறித்த கருத்துக்களை அமைச்சருடன் பகிர்ந்து கொண்டனர்.

அப்போது பேசிய திரு. ஹர்ஷ் மல்ஹோத்ரா , "இந்திய இளைஞர்களுக்கு அதிகாரமளிக்கும் வகையில் பிரதமரின் பயிற்றுநர்கள் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்த திட்டம், வெறும் பயிற்சி மட்டுமல்ல, மாணவர்களின் ஏட்டுக் கல்விக்கும் நடைமுறை அனுபவத்திற்கும் இடையிலான ஒரு பாலமாகத் திகழ்ந்து புதிய வாய்ப்புகளை உருவாக்கும்," என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

>>>>>>>><<<<<<<<

"இந்தியா – ஐரோப்பா யூனியன் இடையேயான உத்தி சார் ஒத்துழைப்பு, உலகின் வளர்ச்சிக்கு ஒரு முன்மாதிரியாக அமையும்"

என்று ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் திருமதி. Ursula Von Der Leyen கூறியுள்ளார்.

தலைநகர் புது தில்லியில் இன்று நடைபெறும் 77-வது குடியரசு தின விழாவில் ஐரோப்பிய கவுன்சில் தலைவர் திரு. Antonio Costa-வுடன் இணைந்து தலைமை விருந்தினராக பங்கேற்கும் அவர் புதுடில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை தெரிவித்தார்.

பிளவுபட்டுக் கிடக்கும் உலகிற்கு ஒரு புதிய பாதையைக் காட்டும் வகையில், இந்தியா மற்றும் ஐரோப்பா இடையேயான உறவு அடுத்த கட்டத்தை எட்டியுள்ளதாக அவர் கூறினார்.

இந்தியா ஐரோப்பா உச்சிமாநாட்டின் மிக முக்கிய அம்சமாக, பல ஆண்டுகளாக எதிர்பார்க்கப்பட்ட 'தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்' இறுதி செய்யப்பட உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இது மட்டுமன்றி, பாதுகாப்புத் துறை மற்றும் தொழில் வல்லுநர்களுக்கான புதிய வேலைவாய்ப்பு கட்டமைப்புகளும் உறுதி செய்யப்பட உள்ளன என்று அவர் கூறினார்.

இதனிடையே, வெளியுறவுத் துறை அமைச்சர் திரு எஸ். ஜெய்சங்கர், நேற்று ஐரோப்பியத் தலைவர்களைச் சந்தித்து பேசினார்.

பின்னர் அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், "இந்த சந்திப்பு இந்தியா - ஐரோப்பிய யூனியன் உறவில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த நிதியாண்டில் மட்டும் ஐரோப்பிய யூனியனுடனான இந்தியாவின் வர்த்தகம் 136 பில்லியன் டாலரை எட்டியுள்ள நிலையில், புதிதாக கையெழுத்தாக உள்ள ஒப்பந்தங்கள்

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைய வழிவகுக்கும் என்றும் திரு. ஜெங்சங்கர் தெரிவித்துள்ளார்.

>>>>>>>><<<<<<<<

மேற்குவங்க மாநிலத்தில் சட்டத்திற்கு புறம்பாக நடந்து கொண்டதாக உதவி தேர்தல் பதிவு அதிகாரி திரு சுமித்ரா பிரதிம் பிரதானை உடனடியாக பணியிடை நீக்கம் செய்ய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது

இது தொடர்பாக அம்மாநில தலைமைச் செயலாளருக்கு ஆணையம் கடிதம் எழுதியுள்ளது.

வாக்காளர் பட்டியல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள, சட்டத்திற்குப் புறம்பாக நான்கு அதிகாரிகளை கூடுதல் உதவி தேர்தல் பதிவு அதிகாரிகளாக நியமித்ததாக அம்மாநிலத்தின் பசீர்காட் இரண்டு பகுதியின் உதவி தேர்தல் பதிவு

அதிகாரியும், வட்டார வளர்ச்சி அதிகாரியுமான திரு சுமித்ரா பிரதிம் பிரதான் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<<

இந்தியாவின் மிகச்சிறந்த வரலாற்றுப் பதிவாளரும், உலகப் புகழ்பெற்ற எழுத்தாளருமான மூத்த பத்திரிகையாளர் திரு Mark Tully புதுதில்லியில் நேற்று காலமானார். அவருக்கு வயது 90.

கடந்த சில நாட்களாக உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த அவர், தில்லியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்ததாக மருத்துவமனை நிர்வாகம் அறிவித்துள்ளது.

>>>>>>>><<<<<<<<

பனிப்புயல் காரணமாக, அமெரிக்காவின் மிசிசிபி, டெக்சாஸ் மாகாணங்களில் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

சுமார் 6 லட்சம் பேர் மின்சாரம் இன்றி தவிப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விமானங்களின் சேவை பாதிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க விமான போக்குவரத்து வரலாற்றில், வானிலை மாற்றத்தால் அதிக அளவிலான விமானங்கள் ரத்து செய்யப்பட்டிருப்பது, இதுவே முதன்முறை என்று ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

>>>>>>>><<<<<<<<

தெற்காசிய மகளிர் Futsal கால்பந்து சாம்பியன் போட்டியில், இந்தியா 5-2 என்ற கோல்கணக்கில் இலங்கையை வென்றது.

பாங்காக்கில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், இந்தியாவின் சார்பில் சோனாலி மண்டல் தொடர்ச்சியாக 3 கோல் அடித்து, ஹாட்ரிக் சாதனை படைத்தார்.

மிதிலா ரமணி மற்றும் பூஜா குப்தா ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

>>>>>>>><<<<<<<<

நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது டிவென்டி – டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை கைப்பற்றியது.

c/o. குவஹாத்தியில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய நியூசிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 153 ரன் எடுத்தது.

154 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்த இந்தியா தொடக்கம் முதலே அதிரடியாக ஆடி 2 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 10 ஓவரிலேயே 155 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரை இதுவரை நடைபெற்ற மூன்று ஆட்டங்களிலும் வெற்றி பெற்று இந்தியா கைப்பற்றியுள்ளது.

>>>>>>>><<<<<<<<

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், மும்பை அணி இன்று பெங்களூரு அணியை எதிர்கொள்ளவுள்ளது.

இப்போட்டி, வதோதராவில் இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>>>>><<<<<<<<

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரிய முன்னாள் தலைவர் திரு. இந்தர்ஜித் சிங் பிந்த்ரா நேற்று காலமானார். அவருக்கு வயது 84.

அவரது மறைவுக்கு சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் தலைவர் திரு. ஜெய் ஷா ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

>>>>>>>>END<<<<<<<<